SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இந்தியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் மார்கழி 6 | ஹிஜிரி 1446 ஜமாதுல் ஆகிர் 18




Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

/maalaiexpressnews

● புதுச்சேரி ● சனிக்கிழமை, டிசம்பர் 21, 2024 ● வெளியீடு: 22-12-2024, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 162 ● 6 பக்கம் ● ரூ.6

## குவைத் புறப்பட்டார் பிரதமர் மோடி

**புதுடெல்லி, டிச. 21-**

பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் அரசு முறை பயணமாக குவைத் நாட்டிற்கு புறப்பட்டார். அரசுமுறை பயணமாக இன்று மற்றும் நாளை என இரண்டு நாள் பயணமாக குவைத் நாட்டுக்கு பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். சுமார் 43 ஆண்டுகளுக்குப் பிறகு வளைகுடா நாட்டிற்கு இந்தியப் பிரதமர் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். கடைசியாக 1981ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி குவைத் நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதன்பிறகு தற்போதுதான் பிரதமர் மோடி செல்கிறார். குவைத் நாட்டின் அமிராக இருக்கும் ஷேக் மீஷல் அல்அகமது அல் ஜாபர் அல்சபாவின் அழைப்பின் பேரில் பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார். பிற்பகலில் அமிரி டெர்மினலை சென்றடையும் பிரதமர் மோடி வளைகுடா ஸ்பிக் தொழிலாளர் முகாமிற்கு சென்று அங்குள்ள இந்திய தொழிலாளர்களை சந்திக்கிறார். இன்று மாலை ஷேக் சாத் அல் அப்துல்லா உள்விளையாட்டு அரங்கில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்கிறார். இதையடுத்து வளைகுடா கால்பந்து தொடரின் தொடக்க விழாவில் கலந்து கொள்கிறார்.

## வார்டு மறு வரையறை முடிந்த பிறகே உள்ளாட்சி தேர்தல்: தமிழக அரசு உறுதி

**சென்னை, டிச. 21-**

வார்டு மறுவரையறை மற்றும் பட்டியலினத்தவர், பழங்குடியினர், மகளிருக்கு ஒதுக்கப்படும் வார்டுகள் குறித்து முடிவு செய்த பிறகே தேர்தல் அறிவிப்பை வெளியிட கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது, “வார்டு மறு வரையறை, இட ஒதுக்கீடு நடைமுறைகள் முடிந்த பிறகு தான் உள்ளாட்சித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்“ என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி அளித்துள்ளது. மேலும், வார்டு மறு வரையறை, இட ஒதுக்கீடு குறித்து முடிவு செய்யாமல் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகாது எனவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில், அரசின் உத்தரவாதத்தை ஏற்று இதுதொடர்பான வழக்கை உயர்நீதிமன்றம் முடித்து வைத்தது.

# வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவிழக்கிறது

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, டிச. 21-**

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், படிப்படியாக கடலிலேயே வலுவிழக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தற்போது சென்னைக்கு 450 கி.மீ தொலைவில் உள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 7 கி.மீ வேகத்தில் கிழக்கு வடகிழக்கு திசையில் நகர்ந்துள்ளது. இது அடுத்த 12 மணி நேரத்திற்குப் பிறகு படிப்படியாக கடலிலேயே வலுவிழக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்றோ அல்லது நாளையோ வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக வறண்ட காற்று உதவியுடன் மீண்டும் தமிழக பகுதிகளை ஓரிரு நாட்களில் அடையக்கூடும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இதன்மூலம் தமிழக பகுதிகளில் பரவலாக வருகிற 24ந் தேதிக்கு மேல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அதன்பின்னர், இந்த தாழ்வு பகுதி வலுவிழந்து 26ந் தேதிக்கு பிறகு வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாவதற்கான சாத்தியமான சூழல் நிலவி வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டு மக்கள் உரிய நேரத்தில் மீண்டும் தக்க பதிலடி கொடுப்பார்கள்: பாஜகவை எச்சரித்த மு.க.ஸ்டாலின்

**சென்னை, டிச. 21-**

திமுக தலைவரும் முதலமைச்சருமான் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் கடந்த நவம்பர் 25ஆம் தேதி தொடங்கி, நேற்றைய தினம் முடிவுற்றுள்ளது. இக்கூட்டத் தொடரில் வீறுகொண்ட வீரர்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முழங்கி இருக்கிறார்கள்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளைப் பார்த்து நாடே வியந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் நலனுக்காக குரல் கொடுப்பது மாநில உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளை எழுப்பி அவையின் கவனத்தை ஈர்ப்பது ஆகிய இரண்டையும் வெற்றிகரமாகச் செய்து காட்டி இருக்கிறார்கள். மற்ற மாநில எம்.பி.க்களுக்கு முன்னோடிகளாக கழக எம்.பி.க்கள் செயல்படுவதைப் பார்த்து நூறாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் தலைவராக நான் எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

தி.மு.க. எம்.பி.க்கள் என்ன பேசுகிறார்கள் நாட்டை உலுக்கும் முக்கியப் பிரச்சனைகளில் தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன என்பதை இன்று நாடே உன்னிப்பாக கவனிக்கும் நிலைக்கு இந்த திராவிடப் பேரியக்கம் வளர்ந்திருப்பதை நினைத்தும் பெருமையாக இருக்கிறது.

அதானி விவகாரம், மணிப்பூர் கலவரம் என, தான் பொறுப்பேற்று பதில் சொல்லியே ஆகவேண்டிய அனைத்திலும் கனத்த மவுனம் காக்கும் பிரதமர் பாராளுமன்றத்தில் பா.ஜ.க.வினரால் ஜனநாயகம் படாத பாடு பட்டபோது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவையை நடத்த விரும்புவதை விட அவையை முடக்க வேண்டும், அரசின் தோல்விகள் குறித்த எந்த விவாதமும் நடைபெற்று விடக்கூடாது என்பதையே மனதில் வைத்து பா.ஜ.க. எம்.பி.க்கள் செயல்பட்டதை நாம் காணமுடிந்தது. ஆக்கப்பூர்வமான விவாதம் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பது பாராளுமன்றத்தைப் பொறுத்தமட்டில் அரிதான நிகழ்வாக பா.ஜ.க. ஆட்சியில் மாறி விட்டதை எண்ணி ஒரு மிகப்பெரிய ஜனநாயக இயக்கமாம் தி.மு.கழகம் கவலை கொள்கிறது.

குளிர்காலக் கூட்டத் தொடர் குறித்து பாராளுமன்ற விவகாரங்கள் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், மக்களவையானது 54.5 விழுக்காடும், மாநிலங்களவை 40 விழுக்காடும்தான் ஆக்கபூர்வமாகச் செயல்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைவிட வேதனையான செய்தி இருக்க முடியுமா?

நமது நாட்டின் பெருமைமிக்க அரசியல் சட்டத்தின் 75ஆவது ஆண்டு கொண்டாட்டத்தின்போது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் கையில் “பாராளுமன்ற ஜனநாயகம்“ எப்படி பிய்த்து எறியப்பட்டுள்ளது என்பதற்கு இந்த குளிர்காலக் கூட்டத்தொடரே சாட்சி. அரசியல்சட்டத்தின் 75 ஆண்டு விழா கொண்டாட்டத்தின்போது ஒன்றிய அச்சட்டத்தை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கரை ஒன்றிய உள்துறை அமைச்சரே அவதூறுசெய்து இழிவுபடுத்திப் பேசுவது பா.ஜ.க.வின் உயர்வர்க்க பாசிச முகத்தை தோலுரித்துக் காட்டிவிட்டது. ஒருபுறம் அரசியல் சட்டத்திற்கு விழா இன்னொரு புறம் அதை உருவாக்கித்தந்த அண்ணலுக்கு அவதூறு! இதுதான் பா.ஜ.க.வின் பசப்பு அரசியல் ஆகும்.

இவ்வளவு களேபரத்திலும் திராவிட முன்னேற்றக் கழக மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயக கடமையாற்ற தவறவில்லை என்பது இவர்கள் கலைஞர் வளர்த்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட திராவிட இயக்க ஆற்றலாளர்கள் என்பதை அரங்கேற்றியுள்ளது.

“ஒரே நாடு ஒரே தேர்தலை” கடுமையாக எதிர்த்துப் பேசிய தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு “மதுரை டங்ஸ்டன் கனிம சுரங்க அனுமதியை ரத்து செய்யுங்கள்” என்றும் “பேரிடர் மேலாண்மை 2024 திருத்தச் சட்டத்தை எதிர்த்தும்“ அனல் பறக்கப் பேசிய தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி “அவைக்குப் பிரதமரே வருவதில்லை” என்று முழங்கிய திருச்சி சிவா அரசியல் சட்டத்தின் 75 ஆவது ஆண்டில், “அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறு கட்டமைப்புக் கூறுகளும் கேசவானந்த பாரதி வழக்கும்“ என அரசியல்சட்ட நுணுக்கம் நிறைந்த ஆ.இராசா மாநில உரிமைகளைப் பற்றியும், மதவாத அரசியல் அச்சுறுத்தல் குறித்தும் உரையாற்றிய ஜெகத்ரட்சகன் “வானிலை அறிவிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துக” என தயாநிதி மாறன் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ஒன்றிய அரசைத் தட்டிஎழுப்பினார்கள்.

பாராளுமன்ற மக்களவை, மாநிலங்களவையில் நமது உறுப்பினர்கள் அனைவர் பேச்சும் தினந்தோறும் ‘முரசொலி’ ஏட்டில் பக்கம் பக்கமாக வெளிவந்தது. இதனைத் தினந்தோறும் படித்தபோது மனதுக்குள் கைதட்டிக் கொண்டேன். தமிழ்நாடு நலன் சார்ந்த நம் நாட்டு நலன் சார்ந்த பேச்சுக்களை நான் மட்டுமல்ல நாடே கைதட்டி இப்படியல்லவா பாராளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் எனப் பாராட்டி வருகிறது.


தமிழ்நாட்டு மக்கள் “நாற்பதுக்கு நாற்பது” என்ற தேர்தல் வெற்றியைத் தந்தபோது “பாராளுமன்றத்துக்குச் சென்று இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?” என்று சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால் அவர்களெல்லாம் வாயடைத்துப் போகும் அளவிற்குத் தி.மு.க. எம்.பி.க்களின் செயல்பாடு அமைந்துள்ளது. அனைத்தையும் பட்டியலிடப் பக்கங்கள் போதாது என்றாலும் ஒன்றிய குளிர்காலக் கூட்டத்தொடரில் மட்டும் நம் எம்.பி.க்கள் ஆக்கப்பூர்வமாக எழுப்பிய அடுக்கடுக்கான திட்டங்கள் பற்றி இங்கே சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

* இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்படும் தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலை. * ரெயில்வே திட்டங்கள். * மெட்ரோ ரெயில் திட்ட நிதி ஒதுக்கீடு.

* சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ்தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் இருப்பது. * விவசாயிகள் கடன் தள்ளுபடி கோரிக்கை.

* விவசாயிகளுக்கான பிஎம். கிசான் திட்டத்தின்கீழ் போதிய நிதி ஒதுக்காதது. * தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை

6–ம் பக்கம் பார்க்க



# புதுச்சேரியில் பஸ் கட்டணம் அதிரடியாக உயர்வு



புதுச்சேரி, டிச. 21–

புதுச்சேரியில் கடந்த 6 ஆண்டுகளுக்குப் பின்னர், பஸ் கட்டணம் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது என, போக்குவரத்து துறை கூடுதல் செயலர் சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் பஸ் கட்டணம் அதிரடியாக உயர்ந்துள்ளது. இதற்கான அறிவிப்பை கவர்னர் கைலாஷ்நாதன் உத்தரவின்பேரில் போக்குவரத்து துறை கூடுதல் செயலர் சிவக்குமார் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, புதுச்சேரியில் கடந்த 2018ம் ஆண்டிற்கு பிறகு தற்போது பஸ் கட்டணம் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஏ.சி., வசதி இல்லாத டவுன் பஸ்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் 5ல் இருந்து ரூ. 7 ஆகவும், அதிகப்பட்ச கட்டணம் 13ல் இருந்து 17 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது குறைந்த பட்சம் 2 ரூபாய், அதிகபட்சம் 4 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

டவுன் பஸ் கட்டணம் ஒவ்வொரு ஸ்டேஜுக்கும் (2 கி.மீ., தொலைவிற்கு) ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி இரண்டாம் ஸ்டேஜ் 8 ரூபாய் என்றும், ஒன்பதாம் ஸ்டேஜ் 17 ரூபாயாக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏ.சி., டவுன் பஸ் குறைந்தபட்ச கட்டணம் 10ல் இருந்து 13 ஆகவும், அதிகப்பட்ச கட்டணம் 26ல் இருந்து 34 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது குறைந்தபட்சம் 3ம், அதிகப்பட்சம் 8 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி முதல் ஸ்டேஜ் ரூ. 13 என்றும் ஒன்பதாவது ஸ்டேஜ் 34 ரூபாய் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டீலக்ஸ் நான் ஏ.சி., பஸ்களுக்கு, ஏ.சி., டவுன் பஸ் களுக்கான கட்டணமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் டீலக்ஸ் ஏ.சி., பஸ்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் 12ல் இருந்து 16 ஆகவும், அதிகபட்ச கட்டணம் 36ல் இருந்து 47 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏ.சி., அல்லாத எக்ஸ்பிரஸ் பஸ்கள் புதுச்சேரி எல்லைக்குள் கி.மீ.,க்கு 0.75 பைசா என்பது 0.98 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. 25 கி.மீ., வரை 20 என, இருந்த குறைந்தபட்ச கட்டணம் 25 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஏ.சி., எக்ஸ்பிரஸ் பஸ்கள் புதுச்சேரி எல்லைக்குள் கி.மீ., 1.30 என்பது தற்போது ரூ. 1.69 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதல் 25 கி.மீ., 50 ரூபாய் வசூலிக்கலாம்.

புதுச்சேரி நகர பகுதிக்குள் ஏ.சி., வால்வோ பஸ் கி.மீ., 1.70 என்பது தற்போது 2.21 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, முதல் 30 கி.மீ.,க்கு 54 ஆக இருந்த கட்டணம் தற்போது 70 ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்த கட்டண உயர்வு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த கட்டண உயர்வு மூலம் புதுச்சேரி கடலூர் பஸ் கட்டணம் ரூ.20லிருந்து ரூ.25 ஆக உயர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஹைதராபாத், பெங்களூருக்கு புதுவையில் இருந்து விமான சேவை மீண்டும் துவங்கியது



புதுச்சேரி, டிச. 21–

புதுச்சேரியில் இருந்து ஹைதராபாத், பெங்களூரு இடையிலான விமான சேவையை கவர்னர், முதலமைச்சர் துவக்கி வைத்தனர்.

புதுச்சேரி லாஸ்பேட்டை விமான நிலையத்திலிருந்து பெங்களூரு, ஹைதராபாத்திற்கு ஸ்பைஸ் ஜெட் மூலம் விமானம் இயக்கப்பட்டது. கடந்த மார்ச் 30ம் தேதி முதல் விமான சேவை திடீரென நிறுத்தப்பட்டது.

மீண்டும் விமான சேவையை துவக்க புதுச்சேரி அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வந்தது. இண்டிகோ நிறுவனம் விமான சேவை துவக்க முன் வந்தது. அதனை யடுத்து புதுச்சேரியில் இருந்து ஹைதராபாத், பெங்களூருக்கு மீண்டும் விமான சேவை நேற்று முதல் துவங்கியது. காலை 11 மணிக்கு பெங்களூருவில் இருந்து 78 இருக்கை கொண்ட இண்டிகோ சிறிய ரக விமானம் 74 பயணிகளுடன் புறப்பட்டது. மதியம் 12:25 மணிக்கு புதுச்சேரிக்கு வந்த விமானத்திற்கு தண்ணீர் பீச்சி அடித்து 'வாட்டர் சல்யூட்' வரவேற்பு அளிக்கப் பட்டது. விமானத்தில் வந்த பயணிகளுக்கு பூ மற்றும் இனிப்புகள் கொடுத்து வரவேற்கப்பட்டனர். மதியம் 12:45 மணிக்கு புதுச்சேரியில் இருந்து 63 பயணிகளுடன் ஹைதரா பாத்திற்கு விமானம் புறப்பட்டது. விமான சேவையை கவர்னர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி கொடி கொடியசைத்து துவக்கி வைத்தனர். அமைச்சர் சாய் ஜெ. சரவணன்குமார், எம்.எல்.ஏ.,க்கள் கல்யாணசுந்தரம், வைத்தியநாதன், தலைமை செயலர் சரத் சவுகான், கவர்னரின் செயலர் நெடுஞ் செழியன் சுற்றுலாத்துறை செயலர் ஜெயந்த் குமார் ரே, இயக்குநர் முரளிதரன், விமான நிலைய இயக்குநர் ராஜசேகர ரெட்டி உட்பட பலர் பங்கேற்றனர்.

# தலையங்கம்

## மாலை எக்ஸ்பிரஸ்

21.12.2024 (சனிக்கிழமை)

## தொடரும் அமளி

நவம்பர் மாதம் 25ந்தேதி முதல் இந்த மாதம் 20ந்தேதி வரை நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் குளிர்கால கூட்டத்தொடருக்காக நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த கூட்டத்தொடரில் பல முக்கியமான மசோதாக்கள் நிறைவேற்றப்படும், நல்ல பல விவாதங்கள் நடக்கும், நாட்டுக்கு தேவையான பல முக்கிய திட்டங்கள் நிறைவேற்றப்படும், நம்முடைய பிரச்சினைகளுக்காக எம்.பி.க்களின் குரல் ஒலிக்கும் என்று மக்கள் பெரிதும் எதிர்பார்த்தனர். ஆனால், நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று என்று நாட்டு மக்கள் நினைக்கும் அளவுக்கு கூட்டம் தொடங்கிய முதல் நாளில் இருந்து கடைசி நாள் வரை கூச்சல், குழப்பம், அமளியில் தொடங்கி மோதல் வரை சென்று முடிந்திருக்கிறது.

முதல் நாளில் அதானி பிரச்சினை அவையில் புயலை கிளப்பி, அவையையே நடக்கமுடியாதபடி ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டே இருந்தது. பிறகு, பிரச்சினைக்கு மேல் பிரச்சினையாகவே ஒவ்வொரு நாளும் கழிந்தது. அரசியலமைப்பு சட்டத்தின் 75வது ஆண்டு விழாவையொட்டி இரு நாட்கள் மட்டும் அவையில் விவாதங்கள் நடந்தது. இந்த விவாதத்தின் போதுகூட அரசியல் சட்டத்தின் முக்கியத்துவத்தை பற்றி பேசாமல், ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டிருந்தனர். மீண்டும் 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' மசோதாக்கள் சூட்டை கிளப்பின. இதுதொடர்பான விவாதத்தில் உள்துறை மந்திரி அமித்ஷா பேசும்போது, "அம்பேத்கர், அம்பேத்கர் என்று கூறுவது இப்போது பேஷனாகிவிட்டது. இதற்கு பதிலாக கடவுள் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால், சொர்க்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும்" என்று கூறியதும் அவையில் அனல் பறக்கத் தொடங்கியது.

இதை ஒரு துருப்பு சீட்டாக எதிர்க்கட்சிகள் கையில் எடுத்துக்கொண்டு, அம்பேத்கரை பா.ஜனதா அவமதித்துவிட்டதாக குரல் எழுப்பினர். பா. ஜனதாவும் அம்பேத்கரை அவமதித்தது காங்கிரஸ் கட்சிதான் என்று பதிலடி கொடுத்தது. நாடாளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை முன்பு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணியினர் கைகளில் அம்பேத்கர் படத்தை ஏந்திக்கொண்டு போராட்டம் நடத்தினர். அடுத்த நாளும் இந்த போராட்டம் தொடர்ந்தது. இதற்கு பதிலடியாக பா. ஜனதா கூட்டணி கட்சியினரும் 'மகர் தார்' என்று கூறப்படும் நுழைவு வாயில் அருகே காங்கிரஸ் கட்சி அம்பேத்கரை அவமதித்துவிட்டதாக கூறி போராட்டம் நடத்தினர்.

இந்த நேரத்தில், அவைக்குள் செல்வதற்காக வந்த 'இந்தியா' கூட்டணி உறுப்பினர்களுக்கும், பா.ஜனதா கூட்டணி உறுப்பினர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் பா.ஜனதா முன்னாள் மந்திரி பிரதாப் சாரங்கி மற்றும் முகேஷ் ராஜ்புத் ஆகியோரின் தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் சொட்டியது. அவர்கள் உடனடியாக ராம் மனோகர் லோகியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ராகுல்காந்திதான் தள்ளிவிட்டதாக காயம் அடைந்த பா.ஜனதாவினர் புகார் தெரிவித்தனர். இந்த தள்ளுமுள்ளுவில் காங்கிரஸ் தலைவர் கார்கேயும், தன்னையும் பா.ஜனதா எம்.பி.க்கள் தள்ளிவிட்டதால் முழங்காலில் அடிபட்டு விட்டதாக கூறினார்.

இப்போது, இந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் பா.ஜனதாவினர் ராகுல்காந்தி மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் படுகாயம் ஏற்படுத்துதல், பிறரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துதல், குற்றவியல் பலவந்தம், குற்றவியல் வன்முறை, பொது உள்நோக்கம் ஆகிய 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்றும் இதே விவகாரத்தால் அமளி ஏற்பட்டதால் இரு அவைகளும் மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக் கப்பட்டது.

# சங்கராபரணி, தென்பெண்ணை ஆறுகளை இணைக்க வேண்டும்

## அமைச்சர் லட்சுமி நாராயணன் வலியுறுத்தல்



புதுச்சேரி, டிச. 21–

டெல்லி வித்யான்பவனில் நடந்த தேசிய நதிநீர் இணைப்பு நிறுவனத்தின் 38வது ஆண்டு பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் பங்கேற்று உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது, 'கோதாவரி காவிரி நதி நீர் இணைப்பின் தற்போதைய மறு மதிப்பீட்டின் அடிப்படையில் கிருஷ்ணா நதியின் பேடி வரதா இணைப்பையும் சேர்த்து 4,189 மில்லியன் கன மீட்டர் நீர் கிடைக்கும்.

அதில் புதுச்சேரிக்கு குடிநீர் மற்றும் பொது பயன்பாட்டிற்கு 27 மில்லியன் கனமீட்டர், தொழில் துறைக்கு 35 மில்லியன் கன மீட்டர் என 2.20 டி.எம்.சி., நீர் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு நீர் பங்களிப்பு தரப்படவில்லை. புதுச்சேரி குடிநீர், பொதுப் பயன்பாடு, தொழில்துறை மற்றும் விவசாயம் அனைத்திற்கும் நிலத்தடி நீரையே நம்பியுள்ளது. அதிகப்படியாக நீர் எடுப்பதால் நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தேசிய நீர் வளர்ச்சி நிறுவனம் பாசனத்திற்காக புதுச்சேரிக்கு 2.75 டி.எம்.சி., நீர் கூடுதலாக தர வேண்டும்.

புதுச்சேரி சங்கராபரணி, தென்பெண்ணை ஆறுகளை இணைக்க வேண்டும். கோதாவரி காவிரி நதிநீர் இணைப்பின் மூலம் புதுச்சேரி மாநிலம் அதற்கான நீர் பங்கீட்டளவை மற்ற மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிப்பது போல் புதுச்சேரிக்கும் அளிக்க வேண்டும்.

இந்த நீர் பங்களிப்பு காவிரி ஆணையத்தின் காரைக்கால் பகுதிக்கு அளிக்கப்பட்டுள்ள நீரின் அளவான 7 ஆயிரம் மில்லியன் கன அடியுடன் கூடுதலாக புதுச்சேரிக்கு தர வேண்டும். இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது, இதற்கான நிதியை மத்திய அரசு ஏற்க வேண்டும்.' இவ்வாறு அவர் பேசினார்.

# நுகர்வோர் விழிப்புணர்வு பேரணி



வேலூர் மாவட்டத்தில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் உலக நுகர்வோர் தினம் கொண்டாடுவதை முன்னிட்டு மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# ஓடையை தூர்வாரும் பணிகளை அமைச்சர் ஆய்வு





தூத்துக்குடி மாவட்டம் அத்திரப்பட்டி, முள்ளக்காடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வயல்வெளிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் வகையில் முள்ளக்காடு உப்பளம் பகுதிகளில் உள்ள ஓடையை தூர்வாரும் பணிகளை அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் சென்று பார்வையிட்டார்.

# முதுநிலை மருத்துவ படிப்பு வரைவு பட்டியல்-சென்டாக் வெளியீடு

புதுச்சேரி, டிச. 21–

எம்.டி., எம்.எஸ்., உள்ளிட்ட முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கு இரண்டாம் கட்ட கவுன்சிலிங் நடத்தி வரைவு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்டாக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, அரசு ஒதுக்கீட்டு இடங்கள், நிர்வாக இடங்கள், தெலுங்கு, சிறுபான்மையினர் இடங்கள் என்ற அடிப்படையில் இந்த பட்டியல் சென்டாக்கின் www. centacpuducherry.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் மருத்துவ மாணவர்கள் இன்று 21ம் தேதி மதியம் 2:00 மணிக்குள் தங்களுடைய டேஷ் போர்டு வழியாக தெரிவிக்கலாம். நாளை சீட் உறுதி செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் வெளியிடப்படும். இதனைத் தொடர்ந்து மருத்துவ மாணவர்கள் சீட் கிடைத்ததற்கான சேர்க்கை கடிதத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். சீட் கிடைத்த மாணவர்கள் கல்லூரியில் வரும் 23ம் தேதி முதல் 28ம் தேதி மாலை 5மணி வரை அனைத்து அசல் சான்றிதழ்களுடன் சேர்க்கைக்கு அணுக வேண்டும். மேலும் சந்தேகங்களுக்கு 0413 –2655570 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்த பணி முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம்





தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் முதன்மை செயல் அலுவலர் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மகேஸ்வரி தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் முன்னிலையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்த பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் அனைத்துத்துறை அலுவலர்களுடன் நடைபெற்றது.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# புதுச்சேரி ஓஷன் ஸ்பிரே ரிசார்ட் ஓட்டலில் வணிக மாநாடு-ஆளுநர் பங்கேற்பு




புதுச்சேரி, டிச. 21-

காரைக்கால் துறைமுகம் சார்பில் புதுச்சேரி ஓஷன் ஸ்பிரே ரிசார்ட் ஓட்டலில் நடைபெறும் வருடாந்திர வணிக மாநாட்டில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு துறைமுக வளர்ச்சிக்கு சிறப்பாக பங்களிப்பு செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில பேசிய துணைநிலை ஆளுநர், காரைக்கால் துறைமுகம் புதுச்சேரியின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்பான பங்காற்றி வருகிறது. தொழில்துறை வளர்ச்சியோடு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தி தருகிறது. இதுபோன்ற தொழில் நிறுவங்களின் சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்கள் காரைக்கால் துறைமுகத்தின் வளர்ச்சிக்கும், புதுச்சேரி மாநிலத்தின் பன்முக வளர்ச்சிக்கும் பெருமளவில் துணைபுரியும். என்று தெரிவித்தார்.

# ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் "மிஷன் ஹெல்தி ஹார்ட்ஸ்" விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, டிச. 21-

புதுச்சேரி ராஜீவ் காந்தி அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் மேம்படுத்தப் பட்ட மருத்துவ சிகிச்சை இலவசமாக அனைத்து மக்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை அளிக்க மருத்துவ வல்லுனர்களின் திறமையான மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை மட்டுமல்லாமல் நோயாளிகளின் சுய சுத்தமும், சுற்றுப்புற சுத்தமும் மிகவும் அவசிய மாகிறது. அவ்வாறு சுத்தத்தையும் கடைபிடித்தால் நோயாளிகள் விரைவில் குணமடைய முடியும்.

இந்த மருத்துவமனையில், மாவட்ட ஆரம்ப தலையீடு மையத் திட்டத்தை செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக, அப்பல்லோ மருத்துவமனையின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புடன் குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. இந்த அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சைக்கான அனைத்து செலவுகளும் அரசாங்கத்தால் ஏற்கப்படுகிறது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், சிறு வயதிலும், ஆரம்ப நிலையிலும் நோயைக் கண்டறிந்து, சரியான சிகிச்சை அளிப்பதாகும். இதுவரை சுமார் 54 அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சைகள் இந்த மருத்துவமனை யால் அப்பல்லோ மருத்துவ மனையின் குழந்தைகள் இதய நோய் நிபுணருடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இந்த மருத்துவமனையில் இத்திட்டம் கிடைப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தங்கள் குழந்தை களுக்கு இந்த வசதியை இலவச மாகப் பெறவும், இம்மருத்துவ மனையின் மாநாட்டு அரங்கில் "மிஷன் ஹெல்தி ஹார்ட்ஸ்" என்ற பெயரில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.புதுவை சபாநாயகர் செல்வம், கதிர்காமம் சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ், புதுவை அரசின் ஆணையர் மற்றும் அரசு செயலர் ஆஷீஷ் மாதவ்ராவ் மோரே, புதுவை அரசு சுகாதார இயக்குனர் டாக்டர் ரவிச்சந்திரன், புதுச்சேரி சுகாதார இயக்கக இயக்குனர் டாக்டர் கோவிந்தராஜன், சென்னை, அப்பல்லோ குழந்தைகள் மருத்துவமனையின் ஆலோசகர் வயது வந்தோர் மற்றும் குழந்தை மருத்துவ தலையீட்டு இருதயநோய் நிபுணர் முத்துக்குமரன் மற்றும் இம்மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ஐயப்பன் ஆகியோரின் முன்னிலையில் புதுச்சேரியின் முதல்வர் ரங்கசாமி இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மருத்துவ மனையின் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர் ரொசாரியா, மக்கள் தொடர்பு அதிகாரி டாக்டர் குருபிரசாத், ஆர்பிஎஸ்கே மாநில நோடல் அதிகாரி டாக்டர் ரகுநாதன் மற்றும் டிஇஜசி மாநில நோடல் அதிகாரி டாக்டர் சரவணன் ஆகியோர் செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவ மனையின் அனைத்து துறை தலைவர்களும், மருத்துவ அதிகாரிகளும், அனைத்து செவிலியர்களும் மற்றும் அனைத்து ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

# மத்திய அமைச்சரை கண்டித்து காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்





புதுச்சேரி, டிச. 21-

அம்பேத்கரை அவமதித்து பேசியதாக மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தை கட்சியினர் ஆர்ப்பாட்டம் மற்றும் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி மாநில காங்கிரஸ் எஸ்.சி., எஸ்.டி., சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு, மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., தலைமை தாங்கினார். எஸ்.சி., எஸ்.டி., பிரிவு தலைவர் ஜெயபால், முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, வைத்தியநாதன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் ஷாஜகான், கந்தசாமி, சீனியர் துணைத்தலைவர் தேவதாஸ், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் அனந்தராமன், கார்த்திகேயன், இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆனந்தபாபு, வழக்கறிஞர் பிரிவு மருது பாண்டியன், இளையராஜா, சிறப்பு அழைப்பாளர் வினோத், மோகன்தாஸ் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் காமராஜர் சிலை எதிரே நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணைச் செயலாளர் சேது செல்வம் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் விஸ்வநாதன், தேசிய குழு உறுப்பினர் தினேஷ் பொன்னையா, நிர்வாக குழு உறுப்பினர்கள் அந்தோணி, ரவி, அமுதா மாநில குழு உறுப்பினர்கள் அபிஷேகம், ராமமூர்த்தி, தேவ சகாயம் மூர்த்தி, முருகன், எழிலன், முரளி, செல்வம், தொகுதி செயலாளர்கள் துரை செல்வம், ரவிச்சந்திரன், கண்ணன், ஆறுமுகம், பெருமாள், கண்ணாடி பட்டு பெருமாள், சுகதேவ், பெஞ்சமின், பெருமாள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## விடுதலை சிறுத்தைகள் ரயில் மறியல்



விடுதலை சிறுத்தை கட்சியினர் மாநில துணை பொதுச்செயலாளர் பாவாணன் தலைமையில் சுதேசி மில் அருகில் இருந்து ஊர்வலமாக சென்று ஏ.எப்.டி., மில் அருகே ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். விடுதலை சிறுத்தை கட்சியினர் போலீசார் இடையே வாக்குவாதம், தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

மத்திய அமைச்சர் அமித்ஷா உருவப்படத்தை போராட்ட குழுவினர் தீ வைத்து எரித்தனர். அவர்களை போலீசார் கைது செய்து அப்புறப்படுத்தினர்.

# ஆத்தூர் முக்காணி பொதுமக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கல்



சேலம், டிச. 21-

திருநெல்வேலி, தென்காசி மற்றும் அருகே உள்ள மாவட்டங்கள் நகரங்களில் கடலோர மாவட்டம் பெண் சால் புயல் மழை காரணமாக பாபநாசம் அணை நூறு அடியை எட்டாத நிலையிலும், அணை திறக்காத நிலையிலும் சமீபத்தில் பெய்த கன மழையால் தூத்துக்குடி கடலோர மாவட்டம் தாமிரபரணி கரையோரம் ஆத்தூர் முக்காணி ஆகிய கிராமங்களில் தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கரையோர மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டு வெள்ள நீர் ஊருக்குள் புகுந்து வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது.

கிராம மக்கள் உண்ண உணவு இன்றி மிகவும் சிரமத்திற்கு உள்ளாதை கேள்விப் பட்ட சங்கரன்கோவில் புதிய பார்வை தன்னார்வ தொண்டு நிறுவனமும், ஸ்ரீ கோமதி அம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நிர்வாகமும் இணைந்து ஆத்தூர் முக்காணி பகுதி பொதுமக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தேவையான ரூபாய் 1168 மதிப்பிலான அரிசி மற்றும் பலசரக்கு பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை 150 குடும்பங்களுக்கும், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வசித்து வரும் பழங்குடியினர் 33 குடும்பத்தினருக்கும் ஏற்பாடு செய்து தனி வாகனத்தின் மூலம் கொண்டு சென்று பொதுமக்களுக்கு சங்கரன்கோவில் புதிய பார்வை அமைப்பும் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகம் புதிய பார்வை தலைவர் என்.பழனி செல்வம், மேனாள் தலைவர் சேவா டிரஸ்ட் செயலாளர் எல்ஐசி மாரியப்பன், செயலாளர் எம்ஆர் ராஜேந்திரன், சிவகிரி சமூகநல வட்டாட்சியர் மைதீன் பட்டாணி ஆகியோர் கொண்ட குழுவினர் இணைந்து கிராம நிர்வாக அதிகாரி மணிகண்டன் முன்னிலையில் நிவாரண பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினர்.

# தமிழ்நாடு பிளைஷ் பிரிக்ஸ் அண்ட் பிளாக்ஸ் தயாரிப்பாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம்




சேலம், டிச. 21-

தமிழ்நாடு பிளைஷ், பிரிக்ஸ் மற்றும் பிளாக்ஸ் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் 19 வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள தனியார் ஹோட்டலில் நடை பெற்றது. இக்கூட்டத்திற்கு நிறுவனத் தலைவர் சரவணன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இதில் மாநிலத் தலைவர் துளசிராமன், மாநிலச் செயலாளர் நடராஜன், மாநில பொருளாளர் ஆண்டோ லிப்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த பொதுக்குழு கூட்டத்திற்கு கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் 2023, 2024 ஆண்டுக்கான சங்கத்தின் வரவு–செலவு கணக்குகளை ஆண்டோ லிப்டன் சமர்பித்தார். சங்க ஆடிட்டராக அமல் ஜார்ஜ் தொடர்ந்து ஆடிட்டராக செயல்பட ஒப்புதல் வழங்கினார்கள். சங்கத்தின் பெயரை உபயோகப்படுத்தி சங்கத்தின் பான் கார்டு முடக்கம் செய்த சசிதரன், ரவி ,அருள்ராஜ், சிவக்குமார், தமிழ்ச்செல்வன் ஆகியோர் செய்த சூழ்ச்சியை முறியடித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் 13.12.2024 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் சங்கத்தின் பான் கார்டு ஆக்டிவேஷன் செய்யப்பட்டுள்ளது. புதிய உறுப்பினர்கள் சேர்க்கை அங்கீகரித்தும், சந்தா கட்டாத உறுப்பினர்களை நீக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுபோன்ற பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. பொதுக்குழு கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்த மேட்டூர் மண்டல செயலாளர் நடராஜன், மேட்டூர் மண்டலத்தின் துணை தலைவர் செல்வகுமார், இணைச்செயலாளர் செல்வக்குமார் ஆகியோர் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். மேலும் இக்கூட்டத்தின் முடிவில் செயலாளர் நடராஜன் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

# சீருடை வழங்கும் விழா



புதுக்கோட்டை, டிச. 21-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம் சுனையக் காடு ஊராட்சியில் அரசு பள்ளியில் நடைபெற்ற சிறப்பு சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கும் விழாவில் சிங்க சிங்கைவால் அம்பாள் தொண்டர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் பொழுது அரசு உயர்நிலைப்பள்ளி, சுனையக்காடு தலைமையாசிரியர் கிருஷ்ணசாமி மற்றும் மூத்த பட்டதாரி ஆசிரியர் ரவி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பள்ளியின் உதவி ஆசிரியர் மாணிக்கம் வரவேற்புரை ஆற்றினார் மற்றும் சிங்க சிங்கைவாழ் அம்பாள் தொண்டர்களால் சிறப்புரையாற்றப்பட்டது. இறுதியாக பள்ளி தலைமை ஆசிரியை சாந்தி நன்றி கூறினார்.

# அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்



கள்ளக்குறிச்சி, டிச. 21-

கள்ளக்குறிச்சியில் விடுதலைச் சிறுத்தை கட்சியின் சார்பாக இந்திய பாராளுமன்றத்தில் சட்ட மேதை மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்த டாக்டர் அம்பேத்கரை அவதூறாக பேசிய மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து விடுதலைச் சிறுத்தை கட்சியின் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கூத்தக்குடி மதியழகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர முகாம் நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# திருவெண்ணைநல்லூர் கடைவீதியில் அமித்ஷா உருவ பொம்மை எரிப்பு



**திருவெண்ணைநல்லூர், டிச. 21–**

புரட்சியாளர் அம்பேத்கரை இழிவுப்படுத்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து உருவ பொம்மை எரிக்கப்பட்டது. நகர செயலாளர் வழக்கறிஞர் மனோகரன் தலைமையில் சேவல் மணி, தயாளன், சிவகுரு, தினேஷ், பிரபாகரன், குணால், தயா, அஜய், ஆதவன், நந்தகுமார், பிரகாஷ், அரவிந்த், முத்தையன், அந்துரு நாராயணன் மற்றும் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ் ஆட்சிமொழி சட்டவார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

**விழுப்புரம், டிச. 21–**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில், தமிழ் ஆட்சி மொழிச் சட்டவார விழாவினை முன்னிட்டு, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார் மாவட்ட ஆட்சியர் பழனி.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆட்சிமொழிச் சட்டவாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், விழுப்புரம் மாவட்டத்தில், 18.12.2024 முதல் 27.12.2024 வரை தமிழ் ஆட்சிமொழிச் சட்ட வார விழா கொண்டாடப்பட்டுவருகிறது.

மேலும், 18.12.2024 பெயர் பலகைகளை தமிழில் எழுதுவது தொடர்பாகவணிக சங்கங்களோடு கலந்தாய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. ஆட்சிமொழித் திட்ட தமிழை வளர்ப்பது ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் அரசுகலைக்கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே பட்டிமன்றம் நடத்தப்பட்டது. அதன் தொடர் நிகழ்வாக தமிழ் மொழியின் சிறப்பு மற்றும் தனித்துவம் குறித்து



பொதுமக்களிடையே விழுப்புரம் ஏற்படுத்தும் வகையில் 350க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி தொடங்கி வைக்கப்பட்டது. இப்பேரணியானது, மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி நகரின் முக்கிய வீதி வழியாக சென்று நான்கு முனை சந்திப்பில் நிறைவடைகிறது. இந்த விழிப்புணர்வு பேரணியில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவ, மாணவியர்கள் கையில் ஏந்திச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்திச் சென்றனர். முன்னதாக, சிலம்பாட்டம் கூட்டமைப்பின் சார்பாக பல்வேறு வகையான சிலம்பாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து 23.12.2024 முதல் 27.12.2024 வரை நான்கு நாட்களுக்கு அரசு பணியாளர்களுக்கான சுற்றோட்டக் குறிப்புகள், செயல்முறை ஆணைகள், குறிப்பாணைகள் வரைவுகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகள் நகராட்சி அலுவலகக் கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், உதவி இயக்குநர் (தமிழ் வளர்ச்சி) சித்ரா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# காவல்துறை தலைமை இயக்குநருக்கு புத்தகம் வழங்கிய ஆட்சியர்



**விழுப்புரம், டிச. 21–**

விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வருகை புரிந்த தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர் சங்கர் ஜீவாலை விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி விழுப்புரம் மாவட்ட சிறப்புகள் குறித்த புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் வடக்கு மண்டல காவல்துறை தலைவர் அஸ்ரா கார்க் விழுப்புரம் சரக காவல் துறை துணைத்தலைவர் திஷா மித்தல், விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபக் சிவாச், கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜத் சதுர்வேதி, கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜாராம் உட்பட பலர் உள்ளனர்.

# தாம்பரம்-தென்காசி செல்லும் ரயில் கடையத்தில் நின்று செல்ல நடவடிக்கை மத்திய ரயில்வே அமைச்சரிடம் பஞ்சாயத்து தலைவர்கள் மனு

**தென்காசி, டிச. 21–**

மத்திய ரயில்வே துறை அமைச்சர் சோமன்னாவை தென்காசி மாவட்ட ஊராட்சி மன்ற கூட்டமைப்பு தலைவர் டி.கே.பாண்டியன், மாவட்ட துணைத்தலைவர் அன்புராணி, மாவட்ட பொது செயலாளர் முத்தையா, கொடிக்குறிச்சி தலைவர் தெட்சணாமூர்த்தி சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

அதில், மகாகவி பாரதியார் பெயரில் திருநெல்வேலி, கடையம், தென்காசி வழியாக புதுடெல்லிக்கும் திரிகூட ராசப்ப கவிராயர் பெயரில் தென்காசியிலிருந்து



புறப்பட்டு பாவூர்சத்திரம், அம்பை, திருநெல்வேலி வழியாக விசாகபட்டிணத்திற்கும், தென்காசியில் இருந்து மதுரை வழியாக சென்னை செல்ல அதிவிரைவு ரயிலான வந்தே பாரத் வண்டி புதிய வழித்தடத்தை உருவாக்கவும் 60 வயதை கடந்த முதியவர்களுக்கு மீண்டும் சலுகை கட்டணத்தை அறிவிக்கவும், தாம்பரத்தில் இருந்து தென்காசி செல்லும் ரயில் வண்டியை கடையத்தில் நிறுத்தம் வேண்டியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சட்டப்பேரவை தலைவர் செல்வத்தின் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர வேண்டும்: சட்டப்பேரவை செயலரிடம் சுயேட்சை எம்எல்ஏ மனு

**புதுச்சேரி, டிச. 21–**

புதுச்சேரி சட்டப் பேரவை தலைவர் செல்வத்தின் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர மேலும் ஒரு பாஜக ஆதரவு சுயேட்ச்சை சட்டமன்ற உறுப்பினர் சட்டப்பேரவை செயலரிடம் மனு அளித்துள்ளனர்.



புதுச்சேரி சட்டப் பேரவை தலைவராக பாஜக கட்சியை சேர்ந்த செல்வம் உள்ளார். இவர் மீது சுயேட்ச்சை சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறிவந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு உருளையன்பேட்டை சுயேட்ச்சை சட்டமன்ற உறுப்பினர் நேரு என்கிற குப்புசாமி, சபாநாயகர் மீது சட்டப்பேரவையில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தி சட்டப்பேரவை செயலர் தயாளனிடம் மனு அளித்திருந்தார்.

இந்நிலையில் பாஜகவிற்கு ஆதரவளிக்கும் திருபுவனை தொகுதி சுயேட்ச்சை சட்டமன்ற உறுப்பினர் அங்காளன் நேற்று சட்டப்பேரவை செயலர் தயாளனிடம் சட்டப்பேரவை தலைவர் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தி மேலும் ஒரு மனு அளித்துள்ளார். தற்போது வரை இரண்டு சுயேட்ச்சை சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவை தலைவர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி மனு அளித்து இருக்கின்ற நிலையில் பாஜக ஆதரவு சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் அங்காளன் பாஜகவை சார்ந்த சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர மனு அளித்திருப்பது புதுச்சேரி அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இதுபோன்று அதிருப்தி எம்எல்ஏக்களும் சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர மனு அளிக்க உள்ளதாகவும் கூடுதல் தகவல் வெளியாகி உள்ளது.

# செஞ்சி ராஜா தேசிங்கு தந்தை மாமன்னன் சொரூப்சிங் 311வது நினைவு நாள்



**செஞ்சி, டிச. 21–**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கோட்டையை ஆண்ட ராஜா தேசிங்கு தந்தையார் சொரூப்சிங் 311வது நினைவு நாள் ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா அமைப்பின் மாநில இணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் யஷ்வந்த் சிங் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் நாகேஸ்வர் சிங், மாநில பொருளாளர் பாலாஜி சிங், இணை பொதுச் செயலாளர் பிரகாசம் சிங், கொள்கை பரப்புச் செயலாளர் சிதம்பரம் ஜெகநாத்சிங் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். அமைப்பின் நிறுவனர் ஸ்ரீதர் சிங் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சியை ஆண்ட ராஜா தேசிங் திருவுருவ சிலையை புதிதாக அமைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மறைந்த சொரூப்சிங்குக்கும் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.இதைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் மாநில துணை பொதுச் செயலாளர் ராஜேஷ் சிங், மாநில துணை தலைவர் ஜெயக்குமார் சிங், சுரேஷ் சிங், கடலூர் ரவிச்சந்திரசிங், செஞ்சி ஜெயசிங், பண்ருட்டி சங்கர் சிங், பொன்னகுப்பம் தேசிங், தகவல் தொழில் நுட்ப அணி ஹுமாயூன் சிங், மேலச்சேரி துளசிராம் சிங், மற்றும் பொதுமக்களும் கலந்துக் கொண்ட னர். முடிவில் பொது மக்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. மாநில துணைத் தலைவர் சோபா ராணி பாலாஜி சிங் நன்றி கூறினார்.

# உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்

**ராமநாதபுரம், டிச. 21–**

திராவிட முன்னேற்ற கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கழக இளம் தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க, ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிவுறுத்தலின்பேரில் மண்டபம் மத்திய ஒன்றியம் சார்பில், ஒன்றிய கழக செயலாளர் முத்துக்குமார் தலைமையில் கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள் முன்னிலையில், சட்டமாமேதை அம்பேத்கர் அவமானம் செய்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பிரதிநிதி கோவிந்த மூர்த்தி, மத்திய ஒன்றிய துணைச் செயலாளர்கள் பவுசியா பானு, சந்திரமோகன் ராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி ஐடிவிங்க் அமைப்பாளர் சதீஷ், உச்சிப்புளி கிளைச் செயலாளர் சுகுமார், சாத்தகோன்வலசை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீரபத்திரன், ஜாகீர் புது நகரம் கிளைச் செயலாளர், மைதீன் கனி, இளைஞரணி வேலு. நாகேந்திரன் (எ) கோபி, உச்சிப்புளி இளைஞர் அணி ஆரோக்கிய பாலா,



எஸ்எம்கேஎம் குரூப் வெள்ளைச்சாமி, பிரமுகர் பாலகிருஷ்ணன், உதயா தகவல் தொழில்நுட்ப ஒன்றிய அமைப்பாளர், தர்காவலசை ஒன்றிய செயலாளர் மோகன், பிரதிநிதி மனோகரன், முருகானந்தபுரம் கிளை செயலாளர் மருங்கன், பிரதிநிதி சக்திவேல், அம்மன் கோவில் குடியிருப்பு கிளை செயலாளர் பஞ்சவர்ணம், அழகன்குளம் கிளைச் செயலாளர் முகமது நௌபர், நாடார்வலசை அறிவழகன், ஒன்றிய பிரதிநிதி தையுப் சுல்தான், ரகுபு, சாலை வலசை கிளைச் செயலாளர் தில்லை ராஜன், இருமேனி கிளைச் செயலாளர் முகமது இக்பால், சுந்தரமுடையான் ஒன்றிய பிரதிநிதி உதயகுமார், சாத்தகோன்வலசை கிளைச் செயலாளர் சீனிக்குப்பை, பாண்டி, பிரப்பன் வலசை கிளைச் செயலாளர் கணேசன், ஒன்றிய பிரதிநிதி ஹக்கீம், இளைஞர் அணி மகேஸ்வரன், சதீஸ், இளைஞர் அணி ராஜேஷ், உச்சிப்புளி ரவீந்திரன், பனைக்குளம் கிளைச் செயலாளர் ஜஹாங்கீர் அலி ஒன்றிய பிரதிநிதி நூருல் மனான், ஆக்டாவலசை கிளைச் செயலாளர் சரவணன், இருமேனி மைதீன், மகளிர் அணி பாதம்பிரியாள், நொச்சியூரணி கிளைச் செயலாளர் தசரதன், இளைஞர் அணியினர் பனைக்குளம் ஹசன், சீனியப்பா தர்ஹா அன்வர்ராஜா, அழகன்குளம் அம்ஜத், உச்சிப்புளி சுதாகர், ஸ்ரீதர், யாசிர், நொச்சியூரணி குகன், பனைக்குளம் சாதிக் அலி, பனைக்குளம் புக்கிட் ஜலில், ராம்நாடு கன்னுச்சாமி உட்பட திமுக ஒன்றிய கிளை பிரதிநிதிகள், மகளிர் அணியினர் மற்றும் உறுப்பினர்கள் என திரளானோர் கலந்துகொண்டனர்.

# சத்தியமங்கலத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



**செஞ்சி, டிச. 21–**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25ஆம் தேதி உலகெங்கும் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது. அதன் ஒரு நிகழ்வாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சத்தியமங்கலம் புனித அந்தோணியார் ஆலய பங்குத்தந்தை ஏ சிறில் தலைமையில் பங்குத்தந்தை அமைத்த குழுக்களாக ஒவ்வொரு வீடாகச் சென்று கிறிஸ்மஸ் வாழ்த்து கூறி இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்றனர். இதனை ஊர் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று சப்போஸ் கிறிஸ்துமஸ்ஸை கொண்டாடினர். இணைந்து கிறிஸ்து பிறப்பை முன்னறிவிக்கும் விதமாக சிறியவர்கள், பெரியவர்கள், கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்து இனிப்பு வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

# தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




**விழுப்புரம், டிச. 21-**

விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே நகராட்சி திடலில் தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கம் சார்பில் பழைய ஓய்வு ஊதியம் திட்டம், சரண்டர் விடுப்பு, அகவிலைப்படி உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்றுக் கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மாவட்ட துணைத்தலைவர் மணிகண்டன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் குமரவேல் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட இணை செயலாளர் மருதமலை, என் வீரபத்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கவிஞர் ம.ரா. சிங்காரம் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். கருணாநிதி, முருகன், ஆறுமுகம், குணசேகரன், ரமேஷ், கதிரவன், ராம்குமார், முன்னாள் மாநில துணைச் செயலாளர் அருணகிரி, கண்ணன், புருஷோத்தமன், சந்திரன், நேதாஜி, அருள், ஜார்ஜ், ராஜேந்திரன், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கம் மற்றும் செயற்குழு குழு உறுப்பினர்கள் மாணிக்கம், பரந்தாமன், ஏழுமலை, ராமமூர்த்தி, பத்ராஜலம், முருகன், செந்தில், குமார், பாலசுப்பிரமணியன், அற்புதராஜ், ராஜேந்திரன், குணசேகரன், ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். 2003க்குப் பிறகு அரசு பணியில் சேர்ந்தோருக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமல்படுத்திட வேண்டியும், கொரோனா காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பை உடனடியாக வழங்கிடவும், அரசில் பல்வேறு துறைகளில் 40% மேலாக காலியாக உள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்பி விடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் சத்துணவு அமைப்பாளர்கள் சமையல் அலுவலர்கள் பணி நிலைக்கேற்ப குறைந்தபட்சம் ஓய்வூதியம் ரூபாய் 6000 அகவிலைப்படியுடன் உடன் வழங்கிடவும் 10 ஆண்டுகளுக்குள் பணி முடித்த பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், 10 ஆண்டுகளாக பணியாற்றி வரும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு பணி மூப்பின் பின் அடிப்படையில் பதிவுறு எழுத்தராக பதிவு உயர்வு வழங்கிடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் பொது சுகாதாரத்துறையில் கொசு புழு ஒழிப்பு களப்பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் பணி வழங்கி, அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட பொருளாளர் கோவிந்தசாமி நன்றி கூறினார்.

# செல்வநாயகபுரம் ஊராட்சியை பேரூராட்சியுடன் இணைக்க எதிர்ப்பு: ஆட்சியரிடம் மனு



**ராமநாதபுரம், டிச. 21-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட செல்வநாயகபுரம் ஊராட்சி பொதுமக்கள் செல்வநாயகபுரம் ஊராட்சியை பேரூராட்சியுடன் இணைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஊர் மக்கள் கிராமத் தலைவர் நவநீதன் மற்றும் ஊராட்சித் தலைவர் பாலுசாமி ஆகியோர் தலைமையில் திரளாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்திருந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து செல்வ விநாயகபுரம் ஊராட்சியை முதுகுளத்தூர் பேரூராட்சி உடன் இணைக்கும் நடவடிக்கையை ரத்து செய்யுமாறு கோரிக்கை மனு வழங்கினர்.

பின்னர் ஊர் தலைவர் ஊராட்சி தலைவர் முக்கியஸ்தர்கள் மற்றும் செல்வநாயகபுரம் ஊராட்சி மக்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது: செல்வநாயகபுரம் ஊராட்சியில் உள்ள கிராம மக்கள் 100 சதவீதம் விவசாயத்தை நம்பியே உள்ளனர். ஊராட்சியில் உள்ள மக்கள் ஒற்றுமையுடன் உள்ள நிலையில் எப்போதும்போல் ஊராட்சி நிலையில் எங்கள் கிராமம் தொடர வேண்டும். செல்வநாயகபுரத்தை பேரூராட்சியுடன் இணைப்பதால் கிராமத்திற்கு பெரிதாக எவ்வித பயனும் கிடைக்காது. எனவே பேரூராட்சியுடன் இணைக்கும் நடவடிக்கையை ரத்து செய்து வழக்கம்போல் செல்வ விநாயகபுரம் ஊராட்சியாக தொடர்ந்து செயல்பட மாவட்ட ஆட்சித் தலைவர் வழிவகை செய்து உதவிட வேண்டும். அதற்காக தற்போது கோரிக்கை மனு வழங்கியுள்ளோம் என்றனர்.

# மதுரை மாவட்டத்தில் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



**மதுரை, டிச. 21-**

மதுரை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் திருமோகூர் ஊராட்சியில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

குறிப்பாக, திருமோகூரில் உள்ள வளையாபதி திருமண மஹாலில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பயனடைந்து தொழில் முனைவோராக உயர்ந்துள்ள பல்வேறு மகளிர் குழுக்கள் மூலம் அவர்களின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, பார்வையிட்டார். அதன்பின்பு, திருமோகூரில் செயல்பட்டு வரும் செம்பருத்தி தையல் தொழில் குழு கூடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு மகளிருடன் கலந்துரையாடினார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா, தெரிவித்ததாவது: வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும். இத்திட்டம் ஊரக பகுதிகளில் தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் சமுதாயத்தில் நிலையான வளர்ச்சி என்பதை நோக்கமாகக் கொண்ட தனித்துவமிக்க திட்டமாகும். இத்திட்டம் துணை முதலமைச்சர் மேற்பார்வையில் செயல்பட கூடிய சிறப்பு திட்டமாகும். இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஆகிய நான்கு வட்டங்களில் 137 ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுய உதவி குழுபெண்கள் மற்றும் அவர் குடும்பத்தை சார்ந்து உறுப்பினர்கள். முதன்மை பயனாளிகளாக பயன்பெற தகுதி உடையவர்கள், பெண்கள், ஆதிதிராவிட பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் வாயிலாக உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குதல், தொழில் குழுக்களை உருவாக்குதல், உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல், தொழில் நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி மற்றும் நுண் நிறுவன நிதி மூலம் நிதி உதவி வழங்குதல் மற்றும் சமுதாய பண்ணை பள்ளி மற்றும் சமுதாய திறன் பள்ளி மூலம் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. தொழில் குழுக்கள் என்பது ஒரே வகையான தொழில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 42 தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களது தொழில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக இதுவரை ரூ.31,50,000 நிதி வழங்கப்பட்டு தொழில் உதவி வழங்கப்பட்டுள்ளது. உற்பத்தி குழுக்கள் என்பது உற்பத்தியாளர் குழுக்கள் என்பது உற்பத்தியாளர்கள் குழுவாக ஒன்றிணைந்து உற்பத்தித் திறனை அதிகரித்தல், உபரி விளைப்பொருட்களை ஒன்று திரட்டுதல், இதர கூட்டு நடவடிக்கைகளுக்காக ஒன்றிணைந்து உற்பத்தியாளர்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரித்தல் ஆகும். புதிதாகத் தொடங்கப்பட்ட உற்பத்திக் குழுக்களுக்கு தொடக்க நிதி மானியமாக தலா ரூ.75,000 வீதம் 108 குழுக்களுக்கு மொத்தந்தொகை ரூ.81 லட்சம் தொடக்க நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் நிறுவனம் விவசாய உற்பத்தியாளர் குழுக்களில் இருந்து ஆர்வமுடைய மகளிர் உற்பத்தியாளர்களை தேர்ந்தெடுத்து அவர்களே முன்னின்று நடத்தும் வகையில் மேலூர் வட்டாரத்தினை தலைமை இடமாகக் கொண்டு மதுரை பலப்பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் புதிதாக தொடங்கப்பட்டு தலா ரூ.30 லட்சம் நிதி உதவிகள் மூலம் தொழில்கள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பின் மகளிர் உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது விளைப் பொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்ப கூட்டுதல், மாட்டு தீவனம் உற்பத்தி, சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவிட் 19 நிதி பெருந்தொற்று காலத்தில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலமாக ஒவ்வொரு ஊராட்சிக்கு தலா ரூ1,25,000 மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாகவும் தலா ரூ.4,00,000 மற்றும் புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்கு தனிநபர் தொழில் கடனாக தலா ரூ.1,00,000 நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,331 பயனாளிகளுக்கு ரூ.9.06 கோடி மதிப்பிலான தொகை மகளிர் கூட்டமைப்பின் வயிலாக தொழில் கடனாக வழங்கப்பட்டுள்ளது. NEFF-Nano Enterprise Financing Fund (NEFF)–PLF என்ற வங்கி கணக்கிற்கு கோவிட்19 100 சதவீதம் கடன் திருப்பம் செய்த ஊராட்சிகளில் உள்ள தொழில்முனைவோர்களுக்கு பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மூலம் மீண்டும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதில் இதுவரை 113 பஞ்சாயத்துகளில் 900 நபர்களுக்கு ரூ.4.58 கோடி மதிப்பிலான கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இணை மானிய நிதி ஊரகப்பகுதிகளில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதயினை இணை மானிய நிதி திட்டத்தின் மூலமும், பிற நிதி நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் பெற்றுத் தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் திட்ட செயல்பாட்டின் மூலம் மதுரை மாவட்டத்தில் 340 நபர்களுக்கு (குறிப்பாக பெண் தொழில் முனைவோர்கள் மொத்தம் 233 பெண்களுக்கு) தொழிலை மேம்படுத்துதல் மற்றும் புதிதாக தொழில் அமைப்பதற்காக 30 சதவீதம் மானியத் தொகையாக ரூ.3.68 கோடி மனியத்துடன் ரூ.11.14 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கி தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சமுதாய பண்ணை பள்ளி இதுவரை 171 சமுதாய பண்ணை பள்ளிகளுக்கு ரூ.13.61 கோடி மதிப்பிலான உதவிகள் வழங்கி விவசாய உற்பத்தியினை பெருக்கி தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. சமுதாய திறன் பள்ளி இதுவரை 81 சமுதாய திறன் பள்ளிகளுக்கு ரூ.64.36 லட்சம் நிதி உதவிகள் மூலம் சுயதொழில் மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மதி சிறகுகள் தொழில் மையம் மதுரை மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும் விதமாக தொழில் திட்டம் தயாரித்தல், ஆலோசனை வழங்குதல், உரிமம் பெற்று தருதல், சந்தை இணைப்பு தொடர்பான தகவல்கள் தெரிவித்தல், தொழில் வளர்ச்சிக்காகவும், பல்வேறு வசதிகளுக்காகவும் மற்றும் பிற துறைகள் மூலம் நிதி இணைப்பு பெற்றுத் தருதல் போன்ற செயல்பாடுகளுடன் வணிகதிட்டம் தயாரித்தல், Cibil Score சரிபார்த்தல், MSME, FSSAI சான்றிதழ், PAN Card பதிவு செய்தல் பிற துறை நிறுவனங்களுடன் வங்கி கடன் இணைப்பு, சந்தை குறித்த தகவல்கள், சந்தைப்படுத்துதல் சேவைகள் வழங்குதல் மற்றும் ணிஷிணிகூஷிகிமி மூலம் சேவைகளை மதி சிறகுகள் தொழில் மையம் என்ற பெயரில் பூமாலை வணிக வளாகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நான்கு ஒன்றியங்களில் 137 ஊராட்சிகளில் இதுவரை 24,117 தொழில் முனைவோர்கள் மற்றும் பயனாளிகளுக்கு ரூ.39.93 கோடி மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுபோன்று வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பல தொழில்முனைவோர்களை உருவாக்கி மக்களின் பொருளாதார நிலையிளை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (மாவட்ட திட்ட அலுவலர்) வி.சுந்தர பாண்டியன், வேளாண் வணிக துணை இயக்குநர் மேரி திருமோகூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.பி.ஆர். அண்ணாமலை உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விநாயகா மிஷன் பல்கலை மூலம் கலை பரிமாற்ற நிகழ்ச்சி




**சேலம், டிச. 21-**

மாற்றுத்திறனாளிகளை கொண்டாடும் விதமாகவும் அவர்களின் வலிமையை போற்றி அவர்களுக்கான சிறந்த அனுபவத்தை தருவதை ஊக்குவிக்கும் விதமாகவும், அதனை சார்ந்த விழிப்புணர்வை அனைவருக்கும் உணர்த்தும் நோக்கில் பல்வேறு நிகழ்வுகள் விநாயகா மிஷன் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் சார்பாக விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் மூலம் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின் படியும் நிர்வாக குழு உறுப்பினர் சுரேஷ் சாமுவேல் துணையுடன் நடத்தப்பட்டது.

இதற்காக முதல் விமான பயணமாக கேரள மாநிலம் திருச்சூர் பகுதியை சேர்ந்த அடப்ட் சொசைட்டி என்ற தன்னார்வல அமைப்பை சேர்ந்த சுமார் 32க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் (6 வயது முதல் 32வயது வரை) அவர்களின் பெற்றோர்கள் மற்றும் உதவியாளர்களுடன் சேலத்திற்கு விமான மூலம் வரவழைக்கப்பட்டனர். இவ்விமான பயணத்திற்கான அனைத்து ஏற்பாட்டினையும் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் செய்திருந்தார்.

தொடர்ந்து சேலம் வருகை புரிந்திருந்த மாற்றுத்திறனாளிகளை விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். இந்த வரவேற்பு நிகழ்வில் விமான நிலைய இயக்குனர் திருவைதேகிநாதன் மற்றும் மேலாளர் பிரகாஷ் ஆகியோரும் பங்கேற்று சிறப்பித்தனர். தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்கு சேலத்தின் சிறப்பை உணர்த்தும் வகையில் பல்வேறு சிறப்பு மிக்க தலங்கள் மற்றும் மேட்டூர் அணை போன்ற பகுதிகள் சுற்றி காண்பிக்கப்பட்டன. இதனை குழந்தைகள் ஆர்வமுடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

மேலும் கலாச்சாரம் மற்றும் மொழியியல் பன்முகத்தன்மையை கொண்டாடும் விதமாக இந்திய அரசின் மூலம் ஏற்படுத்தப்பட்ட ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டத்தை வலியுறுத்தும் விதமாக விநாயகா மிஷன் நிகர்நிலை பல்கலைக்கழகம் சார்பாக கலை பரிமாற்ற நிகழ்வானது விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் மூலம் கனவின் சிறகுகள் என்ற தலைப்பில் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. முன்னதாக நிகழ்விற்கு வருகை புரிந்திருந்த மாற்றுத்திறனாளிகளை துறையை சேர்ந்த மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி வரவேற்றனர். துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் வருகை புரிந்திருந்த அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினராக பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சுதிர் பங்கேற்று தலைமை உரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் டாக்டர் சபரிநாதன் பதிவாளர் டாக்டர் நாகப்பன் தேர்வு கட்டுப்பாட்டாளர் டாக்டர் மணிவண்ணன் மற்றும் பல்கலைக்கழகத்தின் அறங்காவலர் அன்னபூரணி சண்முகசுந்தரம் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர். அடப்ட் சொசைட்டி தன்னார்வலர் அமைப்பின் செயலாளர்திரு பன்டாளம் சஜித்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

கலாச்சார பன்முகத்தன்மையை பரிமாற்றுவதை வலியுறுத்தும் விதமாக துறை மாணவர்களின் தமிழ் பாரம்பரிய நடனமும் மாற்றுத்திறனாளிகளின் கேரள பாரம்பரிய நடனமும் அரங்கேற்றப்பட்டது. மேலும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டமும் மாற்றுத்திறனாளிக்களுடன் இணைந்து துறை மூலம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாக மாற்றுத்திறனாளிகளுக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன. அடப்ட் சொசைட்டி தன்னார்வல அமைப்பின் தலைவர் சன்னி நன்றியுரை வழங்கினார். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் பேராசிரியை தமிழ் சுடர் மற்றும் உதவி பேராசிரியர்கள் முனைவர் தனசேகர் உமா மகேஸ்வரி ஷில்பா விக்னேஸ்வரா மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சம்பத், கார்மேகம், பிரின்ஸ் ஆகியோர் செய்திருந்தனர்.

# நில அளவை அலுவலர்கள் தற்செயல் விடுப்பு போராட்டம்




**மதுரை, டிச. 21-**

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மதுரை மாவட்டம் மைய உறுப்பினர்கள், சங்கத்தின் மதுரை மாவட்ட தலைவர் ராஜ்குமார் தலைமையிலும், மாநிலச் செயலாளர் முத்து முனியாண்டி முன்னிலையில் தற்செயல் விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் களப்பணியாளர்கள் செய்யும் அனைத்து விதமான பணிகளையும் கணக்கில் கொண்டு ஆய்வு மேற்கொள்ளவும், மனித திறனுக்கு ஏற்ற குறியீடுகளை வரையறுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதுபோன்று ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் சங்கத்தின் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# அண்ணாமலை பல்கலைக்கழக மின்னணு மற்றும் கருவியல் துறையில் ஏஐசிடிஇ பயிற்சி




**சிதம்பரம், டிச. 21-**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மின்னணு மற்றும் கருவியல் துறையில் ஏ.ஐ.சி.டி.இ. பயிற்சி மற்றும் கற்றல் வழங்கும் ஆறுநாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் பேராசிரியர்கள் மேம்பாட்டுத் திட்டம் இன்று தொடங்கியது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மின்னணுவியல் துறையில் ஆல் இந்தியா கவுன்சில் ஆப்டெக்னிகல் எஜுகேஷன் யின் பயிற்சி மற்றும் கற்றல் பிரிவான ATAL வழங்கும் 'பேராசிரியர் மேம்பாட்டுத் திட்டம் FDP' நிகழ்ச்சியானது தொடர்ச்சியாக ஆறுநாட்கள் நடைபெறுகிறது. ஸ்மார்ட் விவசாயத்திற்கான மிளிஜி மற்றும் இயந்திர கற்றல்அணுகு முறைகள் (IOT AND MACHINE LEARNING APPROACHES FOR SMART AGRICULTURE (IMLASA2024) எனும் தலைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், முதுகலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர். இந்த ஆறுநாட்கள் நிகழ்வில் "IoT மற்றும் மெஷின் லேர்னிங் அப்ரோச்சஸ் ஃபார் ஸ்மார்ட் அக்ரிகல்ச்சர்" என்ற FDP ஆனது, நவீன விவசாய முறைகளில் புரட்சியை ஏற்படுத்துவதில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் உருமாறும் திறனை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நிகழ்வு விவசாய துறைகளிலுள்ள வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்களை ஒன்றிணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான புதுமையான தீர்வுகளை ஆராய இயந்திர கற்றல், மற்றும் டிஜிட்டல் விவசாய நிர்வாகத்தில், விவசாய திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் AI, IoT சாதனங்கள், இயந்திர கற்றல் மற்றும் சென்சார் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை முன்னிலைப்படுத்துகிறது. குறிப்பாக கிராமப்புற அமைப்புகளில் தரவுபரிமாற்றம் மற்றும் இணைப்பில் அவற்றின் தாக்கம், வளரும் நாடுகளில் ஸ்மார்ட் விவசாயத்தை செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள், நிகழ்நேர மண்பகுப்பாய்வு மற்றும் விவசாயிகளுக்கான முடிவெடுக்கும் உதவிகளில் கவனம் செலுத்துகிறது. இந்த FDP ஆனது, விவசாய நடைமுறைகளை மறுவடிவமைப்பதில், உலகளாவிய உணவுப்பாது காப்பு சவால்களை எதிர்கொள்வதில் மற்றும் நிலையான வளர்ச்சியை ஆதரிப்பதில், எதிர்கால ஆற்றலைப் பற்றிய நுணுக்கமான புரிதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த FDP நிகழ்வின் முக்கிய நோக்கம், "விவசாயத்தை புரட்சிகரமாக்குவதில் இயந்திர கற்றலின் பங்கைப்புரிந்து கொள்வது மற்றும் ஸ்மார்ட் வேளாண்மையில் IoT மற்றும் இயந்திர கற்றலின் புதுமையான பயன்பாடுகளை காட்சிப்படுத்தி நிலையான விவசாய நடைமுறைகளுக்கு இயந்திர கற்றல் சாத்தியம் பற்றி விவரிப்பது மற்றும் விவசாயத்தில் IoT மற்றும் இயந்திர கற்றலை செயல்படுத்துவதில் உள்ளவாய்ப்புகள் மற்றும் சவால்களை கண்டறிதல்" என சொல்லப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்பபுல நிகழ்ச்சி அரங்கத்தில் (GJR HALL) டிசம்பர் 16 ம்தேதி தொடங்கியது. இந்நிகழ்வில், மின்னணு மற்றும் கருவியல் துறைபேராசிரியர் முனைவர் சக்திவேல் வரவேற்புரை வழங்கி FDP தொடர்பான விரிவான அறிக்கையினை வழங்கினார். அதனை தொடர்ந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கமிட்டியின் உறுப்பினரும் மற்றும் நுண்கலைபுலத்தின் புலமுதல்வருமான முனைவர். டி. அருட்செல்வி திஞிறி நிகழ்வினை தொடங்கிவைத்து சிறப்புரை ஆற்றினார். மேலும், அண்ணாமலைப் பல்கலைக்கழக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புலத்தின் புலமுதல்வர் முனைவர் கார்த்திகேயன் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்விற்கு, மின்னணு மற்றும் கருவியல் துறைதலைவர் மற்றும் பேராசிரியரான முனைவர். அலமேலுமங்கை தலைமை வகித்தார். நிகழ்ச்சியின் நிறைவாக, மின்னணு பொறியியல் துறைபேராசிரியர் முனைவர். ஆர். வினோதா நன்றியுரை வழங்கினார்.

# கடன் வழங்குதல் சம்மந்தமாக புரிந்துணர்வு ஒப்பந்தம்



தமிழ்நாடு கிராம வங்கியும், கிராமத்தின் ஒளி நிறுவனமும் சேர்ந்து மகளிர் கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு கடன் வழங்குதல் சம்மந்தமாக புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு கிராம வங்கி பொது மேலாளர் வாசுதேவன், கிராமத்தின் ஒளி நிர்வாக இயக்குனர் சக்திகிரி மற்றும் வங்கியின் உயர் அலுவலர்கள் கிராமத்தின் ஒளி அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாட்டு மக்கள் உரிய நேரத்தில் மீண்டும் தக்க பதிலடி கொடுப்பார்கள்... (முதல் பக்க தொடர்ச்சி)

விரைவுபடுத்துதல்.

* சுங்கச்சாவடிகளை ஒழித்தல். * நாட்டில் நிலவும் வேலைவாய்ப்பின்மை. * நீதித்துறையில் பன்முகத்தன்மை கோரிக்கை.

* சிறுபான்மையினர் பொருளாதாரத் திட்டங்கள் பற்றிய கோரிக்கை. * சிறுபான்மையினரைத் தாக்கிப் பேசிய உயர்நீதிமன்ற நீதிபதிக்கு பாராளுமன்றக் கண்டனத் தீர்மானம். * நீட் தேர்வு முறைகேடுகள். * வக்ப் வாரிய சட்டத் திருத்த எதிர்ப்பு. * தமிழ்நாட்டின் விமான நிலையத் திட்டங்கள்.

* இந்திய சீன எல்லைப் பிரச்சனை பற்றி வெள்ளை அறிக்கை கோரியது. * சென்னைதூத்துக்குடி வந்தே பாரத்.

* பேரிடர் மேலாண்மை நிதி ஒதுக்காதது. * உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை.

* மதுரை எய்ம்ஸ் * நூறு நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்தி தினக் கூலியையும் உயர்த்துவது.

* அகழ்வாராய்ச்சிக்குத் தமிழ்நாட்டிற்கு ஏன் நிதி ஒதுக்கவில்லை.

இப்படி எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டின் உரிமைகளை எந்த மாநில எம்.பி.க்களைக் காட்டிலும் ரு தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய கழக எம்.பி.க்கள் எழுப்பியது எழுச்சியூட்டியது.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வரும் தி.மு.க.வின் தலைவர் என்ற நிலையில் நம் எம்.பி.க்களின் சாதனைகளை மார்தட்டி அறிவித்துக்கொள்ள வேண்டியது முக்கியம் என்றே கருதுகிறேன்.

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டின் குரலாகக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சினைகள் எழுப்பிய மாநில உரிமை முழக்கங்கள் ஜனநாயகத்தைப் பாழ்படுத்தும் "ஒரே நாடு ஒரே தேர்தலை" ஆணித்தரமாக எதிர்த்த பாராளுமன்றக் குரல்கள் எல்லாம் பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான ஒன்றிய அரசின் செவிகளில் உரக்கவே விழுந்திருக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. அதன் மூலம் ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை தமிழ்நாட்டு மக்களை ஓரவஞ்சனையுடன், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்த முடியாது என்ற செய்தியை அழுத்தம் திருத்தமாகக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள் நமது எம்.பி.க்கள்!

இனியும் ஒன்றிய அரசு திருந்தவில்லை என்றால் தமிழ்நாட்டின் உரிமைகளைத் தரவில்லையென்றால் தமிழ்நாட்டு மக்கள் உரிய நேரத்தில் மீண்டும் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பது உறுதி!

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# சித்த மருத்துவ விழிப்புணர்வு பேரணி: முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்தார்




**புதுச்சேரி, டிச. 21-**

புதுச்சேரி அரசு ஆயுஷ் துறையின் கீழ் இயங்கும் சித்த மருத்துவ பிரிவு சார்பாக அகத்தியர் பிறந்தநாள் சித்த மருத்துவதினமாககொண்டாடப்பட உள்ளது. இதன் முன் நிகழ்வாக சித்த மருத்துவ பிரிவை சார்ந்த மருத்துவர்கள், மருந்தாளர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பில் சித்த மருத்துவ சிறப்புகளை எடுத்துரைக்கும் முகமாக இருசக்கர விழிப்புணர்வு பேரணியானது புதுச்சேரி அரசு ஆயுஷ் இயக்குநரகத்தில் இருந்து புறப்பட்டது. பேரணியை முதல்வர் ரங்கசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார். ஆயுஷ் துறை இயக்குனர் ஸ்ரீதரன், வில்லியனூர் ஆயுஷ் மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளரும் தலைமை சித்த மருத்துவருமான இந்திரா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். சித்த மருத்துவ விழிப்புணர்வு பேரணியானது புதுவை சட்டசபை வளாகத்தில் தொடங்கி சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை அண்ணாசாலை வழியாக ஒதியஞ்சாலை நலவழி மையத்தை வந்து அடைந்தது.

# மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து மனிதநேய மக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டம்




**தஞ்சாவூர், டிச. 21-**

மாநிலங்களவையில் சட்ட மேதை அம்பேத்கர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, கும்பகோணம் தலைமை தபால் நிலையம் அருகில் மனிதநேய மக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், சட்ட மேதை அம்பேத்கர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த உள்துறை அமைச்சர் அமித்ஷா தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். இல்லையென்றால் அவரை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட பொறுப்பு குழு தலைவர் ரஹ்மத் அலி தலைமை வகித்தார். மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜாபர் அலி புர்கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ராஜ் முகமது, முகமது ரிபாய் ஆகியோர் கண்டன உரையாற்றினார். முன்னாள் மாவட்ட நிர்வாகிகள் ஹிபாயத்துல்லா, அப்துர் ரஹ்மான், பஜ்ருல் நூர், அப்துல் காதர் முகமது செல்லப்பா உள்ளிட்டோர் பலர் கலந்துகொண்டு அமித்ஷாவுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

# கார்த்தி வித்யாலயா பள்ளியில் மருத்துவ முகாம்




**கும்பகோணம், டிச. 21-**

கும்பகோணம், கார்த்தி வித்யாலயா பள்ளியில், நேற்று மருத்துவ முகாமானது பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் நடைபெற்றது. கும்பகோணம் கார்த்தி வித்யாலயா கல்வி குழுமம் மற்றும் கும்பகோணம் மலர் மருத்துவம் இணைந்து நடத்திய இந்த மருத்துவ முகாம் ஆனது அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. உணவே மருந்து,மருந்தே உணவு என்ற சொல்லுக்கு இணங்க மருத்துவ முகாம் ஆனது மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் உடல் நலம் மிகவும் முக்கியம் என்பதனை கருத்தில் கொண்டு இந்நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த கார்த்தி வித்யாலயா பள்ளி தலைவர் கார்த்திகேயன், பன்னாட்டு பள்ளி தாளாளர் பூர்ணிமா கார்த்திகேயன் அனைவரும் நன்றியினை தெரிவித்தார்கள். மேலும் மருத்துவ முகாமில் மருத்துவர் ஹரிஷ் கலந்து கொண்டு எந்த வகையான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என எடுத்து உரைத்தார்கள். இந்த மருத்துவ முகாமில் அனைவருக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று வரவேற்பு உரையினை பள்ளி முதல்வர் அம்பிகாபதி வழங்கினார்கள். இந்த மருத்துவ முகாமில் 250க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள்.

# ரூ.5 லட்சம் மதுபாட்டில்கள் பறிமுதல்



**கோட்டக்குப்பம், டிச. 21-**

விழுப்புரம் மாவட்டம் மயிலம் கூட்டேரிப்பட்டு பகுதியில் நேற்று இரவு புதுச்சேரியில் இருந்து சென்னையில் உள்ள நட்சத்திர விடுதிக்கு ஒன்றுக்கு கடத்தி செல்லப்பட்ட ரூ.ஐந்து லட்சம் மதிப்புள்ள உயரக மது பாட்டில்கள் விழுப்புரம் மாவட்ட நுண்ணறிவுப் பிரிவு போலீசார் பறிமுதல் செய்து தீவிர புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

10 ரூபாய் நாணயங்கள் பயன்பாடு குறித்து

# விழிப்புணர்வு ஏற்படுத்த நுகர்வோர் அமைப்பினர்களுடன் ஆய்வுக்கூட்டம்



**கடலூர், டிச. 21-**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடம் 10 ரூபாய் நாணயங்கள் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வங்கி மேலாளர்கள், வர்த்தக சங்கங்கள், எரிபொருள் நிறுவனங்கள், தமிழ்நாடு போக்குவரத்துக்கழகம், வணிகவரித்துறை,நுகர்வோர் அமைப்பினர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்டத்தில் சில வணிக இடங்களில் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் 10 ரூபாய் நாணயத்தின் செல்லுபடி தன்மை குறித்த சந்தேகத்தின் காரணமாக 10 ரூபாய் நாணயங்களை ஏற்கமறுக்கிறார்கள் என மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது.

இந்திய அரசின் கீழுள்ள நாணய தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் நாணயங்களை இந்திய ரிசர்வ் வங்கி புழக்கத்தில் விடுகிறது. நாணயங்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார மதிப்புகளின் பல்வேறு கருப்பொருட்களை பிரதிபலிக்கும் தனித்துவமான அம்சங்களை கொண்டுள்ளன. மேலும், புதிய நாணயங்கள் இந்திய அரசால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படுகின்றன. நாணயங்கள் நீண்ட ஆயுளைக்கொண்டிருப்பதால் வெவ்வேறு வடிவமைப்புகள் மற்றும் வடிவங்களை கொண்டு ஒரே நேரத்தில் சந்தையில் புழங்குகின்றன. நாணயங்களின் தனித்துவமான அம்சங்கள் குறித்து இந்திய ரிசர்வ் வங்கி மூலம் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த நாணயங்கள் அனைத்தும் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும். நாணயங்களை அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் ஏற்றுக்கொள்ளலாம். மேலும், எவரேனும், நாணயங்களை வாங்க மறுக்கும்பட்சத்தில் கடலூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் புகார் தெரிவிக்கலாம் எனஇக்கூட்டத்தில்தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் ராஜீ உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# நலத்திட்ட உதவி வழங்கல்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் வழங்கினார்கள்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# குவைத் புறப்பட்டார் பிரதமர் மோடி

# காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவிழக்கிறது

# வார்டு மறு வரையறை முடிந்த பின் உள்ளாட்சி தேர்தல்: தமிழக அரசு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 21-12-2024 சனிக்கிழமை •வெளியூர்: 22-12-2024 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்